2023 ஏப்ரல் 21] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

உதவிப் பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அதன் பின்னர் 10 ஆண்டு காலமாக இதுவரையில் நியமனம் செய்யப்படவில்லை. கிட்டத்தட்ட 792 பணியிடங்கள் காலியாக உள்ளன. 10 ஆண்டு கால பிரச்சினை. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சென்றிருக்கிறது. அது விரைவில் பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. நன்றி.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *அதேபோல பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் நோக்கம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்காலத்தில் அது நிதிநிலைமைக்கேற்ப நடைபெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(உ) கடலூர் மாவட்டம், வீராணம்-பாளையங்கோட்டை விவசாயப் பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்குள் கொண்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள். ஒரு நிமிடம்தான், ஒரு நிமிடத்தில் பதிவு செய்யுங்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முப்போகம் விளைகின்ற கடலூர் மாவட்டத்தின் நிலங்களை, குறிப்பாக வீராணம் மேற்குப் பகுதி விவசாய நிலத்தையும், திருமுட்டம் பகுதியில் இருக்கின்ற பாளையங்கோட்டை விவசாய நிலத்தையும் ஒன்றிய அரசு, தமிழக அரசோடு கலந்தாலோசிக்காமல் ஏலம் விடுவதற்கு முயற்சித்ததை, 24 மணி நேரத்திற்குள் தனது ஆளுமையான அணுகுமுறையால் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அதற்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.*

அந்தப் பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்கின்ற வரையறைக்குள் கொண்டு வருவதன்மூலம் எங்களுக்கு ஒரு நிரந்தர பாதுகாப்பும், நிம்மதியும் கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.